### இணையத்தில் பாதுகாப்பாகவும் விழிப்பு நிலையிலும் இருக்க

# நான்கு S.U.R.E. வழிமுறைகள்



SOURCE

## மூலம்

- தகவல் நம்பகமான தளம் அல்லது நபரிடமிருந்து வருகிறதா என்று சரிபாருங்கள்
- அதிகாரத்துவ இணையத்தளத்தைப் போல் பாவனை செய்யும் போலி இணையத்தளங்கள் குறித்து கவனமாக இருங்கள்.






UNDERSTAND

## புரிந்துகொள்ளுங்கள்

- தகவல்கள் உண்மையாக இருக்க வேண்டும். உள்ளடக்கம் தெளிவில்லாமலும் மேலோட்டமாகவும் இருந்தால் கவனமாக இருங்கள். (உதாரணத்திற்கு, தேதி, நேரம், இடம் போன்றவை)
- பிழைகளைக் கவனியுங்கள். பொதுவாக பொய்ச் செய்திகள் அல்லது ஏமாற்று செய்திகளில் எழுத்து, இலக்கண, குறியீட்டுப் பிழைகள் இருக்கும்.






RESEARCH

## ஆராயுங்கள்

- ஆழமாக ஆராயுங்கள் – சந்தேகத்துக்குரிய உள்ளடக்கம் நம்பகமான செய்தித் தளங்களில் இடம்பெற்றிருக்கிறதா என இணையத்தில் தேடிப் பாருங்கள்.
- அதிகமான மூலங்கள் – குறைந்தபட்சம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நம்பகமான மூலங்களைக் கண்டறிந்து தகவலின் உண்மைத் தன்மையை உறுதி செய்யுங்கள்.






EVALUATE

## மதிப்பிடுங்கள்

- நாணயத்திற்கு இரண்டு பக்கம் – சில உள்ளடக்கங்கள் ஒருதலைப்பட்சமாகவும் உண்மைச் சம்பவத்தைப் பிரதிபலிக்காமலும் இருக்கலாம். அதற்கு வேறு பக்கங்களும் இருக்கலாம் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.
- சமநிலையுடன் சீர்த்தூக்கி நேர்மையாக மதிப்பிடுங்கள் – எண்ணங்களை மாற்றும் நோக்கத்தோடு உள்ளடக்கம் திரிக்கப்பட்டோ மாற்றப்பட்டோ இருக்குமா என்று சிந்தித்துப் பாருங்கள்.




NLB | National Library Board Singapore

பொதுமக்கள் தகவல்களைச் சரியாகப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் தேசிய நூலக வாரியத்தின் திட்டம்தான் S.U.R.E. மேலும் தெரிந்துகொள்ள எங்கள் இணையப் பக்கத்துக்கு வருகை புரியுங்கள்.

go.gov.sg/sure1